<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண்.83/2015</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **25.10.2025** |
| **பெயர்** | **பன்னீர்செல்வம்** |
| **த/பெ** | **கண்ணுசாமி** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்–** 12.25.**p.m**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 295/3 எ 2. தாவா சொத்தின் 4 எல்லைகள் என்ன என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் விஸ்தீர்ணம் 3½ செண்ட் ஆகும். தாவா சொத்தை பர்மா அகதிகளுக்கு தானமாக கொடுத்ததை காண்பிக்க இந்நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். தாவா சொத்து நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் என்றால் சரியல்ல.

2. இது தொடர்பாக அரசாங்கம் தான் கேட்க முடியும் என்றால் சரியல்ல. எங்களுக்கு சொந்தமான நிலம். வழக்கு சொத்து எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கடந்த 60 ஆண்டுகாலமாக பிரதிவாதிகள் வீடு கட்டி வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் சர்வே எண் 297–ல் தான் வசித்து வருகிறார்கள். வழக்கு சொத்து தொடர்பாக வருவாய் துறை மற்றும் காவல்நிலையத்தில் ஏதேனும் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

3. பர்மா அகதிகளுக்கு தான் அரசாங்கம் நிலம் ஒதுக்கியது என்றால் சரிதான். தாவா சொத்து செங்குன்றம் பிரதான சாலையில் உள்ளது என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தில் ே◌ஹாட்டல் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் ஹோட்டல் நடத்த வேண்டும் என்று தான் வழக்கு சொத்தை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, கிராம மக்களை கேட்டு தான் நடத்தி வருகிறேன்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 12.34.p.m.**